

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (19.12.2024) ஈரோடு விருந்தினர் இல்லத்தில், மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் தற்போதைய நிலை ஆகியவை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு மாநகராட்சி ஆணையர் மரு. மனிஷ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் - விசைத்தறிக் கூடத்தைப் பார்வையிட்டார்!

## குறைகளைக் கேட்டறிந்தார்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2024) ஈரோடு மாவட்டம், பிச்சாண்டம்பாளையம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் இயங்கி வரும் விசைத்தறி கூடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்தும், நெசவாளர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஈரோடு, டிச. 21-

**ஈரோட்டில் செயல்பட்டு வரும் விசைத்தறி கூடத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் விசைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ள விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட, விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மற்றும் மானியத்துடன் கூடிய மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ், 750 அலகுகள் வரை வழங்கப்பட்டு வந்த விலையில்லா மின்சாரம் 3.03.2023 முதல் 1000 அலகுகளாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது, மின்னணு விசைப் பலகைகள் உற்பத்தியின் போது நூல்கள் அறுந்து விழுவதை தடுக்கவும், சாதாரண விசைத்தறிகளில் சீராகவும் மற்றும் நிலையான தரத்துடனும் துணிகள் உற்பத்தி செய்யப்படுவதை உறுதிப் படுத்தவும் 50 விழுக்காடு அரசு மானியத்துடன் 5000 விசைத்தறியில் மின்னணு விசைப் பலகைகள் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 6 கோடி ரூபாய் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, விசைத்தறி செறிவு மிக்க பகுதிகளில் 5000 விசைத்தறிகளில் மின்னணு விசைப் பலகைகள் பொருத்தப்பட்டது போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

விசைத்தறி தொழில் மேம்பாட்டிற்காகவும், இப்பணியில் ஈடுபட்டு வரும் நெசாவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், விசைத்தறி கூடத்திற்கு நேரில் சென்று அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்திடும் பொருட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.12.2024) ஈரோடு மாவட்டம், பிச்சாண்டம்பாளையம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் இயங்கி வரும் இரண்டு விசைத்தறி கூடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்தும், நெசவாளர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்த விசைத்தறி கூடங்களில் 24 விசைத்தறிகள் மூலம் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 5 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தொழிலாளர் நலன் (ம) திறன் மேம்பாட்டுத் துறை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில்

# தமிழ்நாட்டில் புதிய 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்!

## கமுதியில் - அமைச்சர் சி.வெ.கணேசன் திறந்து வைத்தார்!

கமுதி, டிச.21-

இளைஞர்கள் வேலைக்கேற்ற திறனைப் பெறவும் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்கவும் தமிழ்நாட்டில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டவாறு இளைஞர்களுக்கு, பயனுள்ள வேலைவாய்ப்பு பெற்றுத் தரு வதற்கும் தொழிற்சாலைகளுக்கு ஏற்றவாறு இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து வேலை வாய்ப்பை உருவாக்கிடவும் கடலூர் மாவட்டம் வேப்பூர், திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை, நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, திருப்பத்தூர் மாவட்டம் நாட்றாம்பள்ளி, திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர், திருவண்ணாமலை மாவட்டம் செங்கம், தூத்துக்குடி மாவட்டம் ஏரல் ஆகிய 10 இடங்களில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 111 கோடி ரூபாய் செலவில் துவங்கிட அரசாணை வெளியிடப்பட்டது.

இதனை தொடர்ந்து 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் துவக்கி வைக்கப்பட்டன. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அரசு தொழிற்பயிற்சி நிலையம் கமுதியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு இத்தொழிற்பயிற்சி நிலையத்தை துவக்கி வைத்தார்.

இந்த தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலமாக 10 ஆம் வகுப்பு படித்த மாணவர்கள் பயன் பெறும் வகையில் தொழில் 4.0 தொழிற்பிரிவுகளான அட்வாண்ஸ்டு சி.என்.சி (Advanced CNC), மெக்கானிக் எலக்ட்ரிக் வெஹிக்கள் (Mechanic Electric Vehicle), இண்டஸ்ட்டிரியல் ரோபோட்டிக்ஸ் & டிஜிட்டல் மேனுஃபேக்சரிங் டெக்னீசியன் (Industrial Robotics & Digital Manufacturing Technician), மேனுபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் & ஆட்டோமேஷன் (Manufacturing Process Control & Automation), நவீன கால தொழிற்பிரிவுகளான விண்ட் பிளான்ட் டெக்னீசியன் (Wind Plant Technician), எலக்ட்ரீசியன் பவர் டிஸ்ரிபியூஷன் (Electrician Power Distribution), சென்டரல் ஏர் கண்டிஷன் பிளாண்ட் மெக்கானிக் (Central Air Condition Plant Mechanic), ஏரோநாட்டிகல் பிட்டர் (Aeronautical Fitter) மற்றும் ஹெல்த் சானிட்டரி இன்ஸ்பெக்டர் (Health Sanitary Inspector) ஆகிய தொழிற்பிரிவுகளிலும், 8 ஆம் வகுப்பு படித்த மாணவர்கள் பயன் பெறும் வகையில் வெல்டர் (Welder), பிளம்பர் (Plumber), டிரஸ் மேக்கிங் (Dress Making) ஆகிய தொழிற்பிரிவுகளிலும் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன. இதன் மூலம் இந்த ஆண்டில் 1192 மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டு பயன் பெறுவர்.

இவ்விழாவில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ.வீரராகவ ராவ், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலு வலர்கள் கலந்து கொண்டனர். மற்ற இடங்களிலும் நடைபெற்ற துவக்க விழாவில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஆணைக்கிணங்க இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பட்சா முத்துராமலிங்கம் அறிவுறுத்தலின் பேரில் அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவாக பேசிய அமித்ஷாவைக் கண்டித்து முதுகுளத்தூர் மேற்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. முதுகுளத்தூர் மேற்கு ஒன்றியக் கழக செயலாளர் கே. சண்முகம் தலைமை ஏற்று நடத்தினார். ஒன்றிய துணை செயலாளர் சீவன்செல்வராஜ்,ஒன்றிய பொருளாளர் சந்திரன் ஒன்றிய கவுன்சிலர் ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.ராமர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். ராஜா, கிளை செயலாளர்கள் சண்முகவேல், கலைஞர், வடிவேல், சிவக்குமார், ராமமூர்த்தி, கருப்பையா, பால்பாண்டியன், மற்றும் கழக பிரதிநிதிகள், நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவிலில் அம்பேத்கரை அவதூறாக பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க பொருளாளர் எம்.ஆர்.கே.பி. கதிரவன் தலைமையில் ஊர்வலம் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. முன்னதாக ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றியச் செயலாளர் முத்துசாமி தலைமை தாங்கினார். பொருளாளர் ஜெயபாண்டியன், நகரச் செயலாளரும் பேரூராட்சித் தலைவருமான கணேசமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக தி.மு.க. கிழக்கு மாவட்டப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி. கதிரவன் தலைமையில் கட்சியினர் கட்சி அலுவலகத்தில் ஊர்வலமாக புறப்பட்டு பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது. இதில் தி.மு.க ஒன்றிய நகர நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி, மகளிர் அணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மருத்துவக் கழிவு விவகாரம்!

# எதிலாவது அரசியல் செய்யத் துடித்துக் கொண்டிருக்கிறார்!


## எடப்பாடி பழனிசாமிக்கு – அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம்!

சென்னை,டிச.21-

"மருத்துவக்கழிவு விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமி அரசியல் செய்யத் துடித்துக் கொண்டிருக்கிறார்" என்று அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடந்த பத்தாண்டுகால அடிமை அ.தி.மு.க. ஆட்சியில் தான், கோவை, தேனி, திருநெல்வேலி, விருதுநகர் உள்ளிட்ட தமிழ்நாடு கேரளா எல்லையோர பகுதிகளில், கேரளாவில் இருந்து சட்டவிரோதமாக கழிவுகளை கொண்டுவந்து கொட்டி தமிழ்நாடே கேரளாவின் குப்பைத்தொட்டியாகி கிடந்தது. 2016 ஆம் ஆண்டு "மருத்துவக் கழிவுகள் அபாயம்: இன்னும் விழித்துக் கொள்ளாத தமிழகம்!" என்று விகடன் தனி கட்டுரையே வெளியிட்டது. 2019 ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டம், திருவில்லி புத்தூர் அருகே உள்ள இனாம் கரிசல்குளம் கிராமத்தில் கேரளாவில் இருந்து குப்பைகளை கொண்டு வந்து லாரி லாரியாக கொட்டிய லாரிகளை மக்களே சிறைபிடித்த நிகழ்வு என பல்வேறு உதாரணங்களை எடுத்துக்கூற முடியும்.



முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி அமைந்தவுடனே தமிழ்நாடு – கேரளா எல்லை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு கேரளா கழிவு கள் தமிழ்நாட்டிற்குள் நுழைவது பெருமளவு தடுக்கபட்டு வருகிறது. கழிவுகளை கொட்டுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்பாரா விதமாக நடக்கும் ஓரிரு நிகழ்வுகள் மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு சம்மந்தப்பட்ட குற்றவாளிகள் சட்டப்படி தண்டிக் கப்பட்டு வருகின்றனர்.

சமீபத்தில் திருநெல்வேலி மாவட்டத்தின் கல்லூர்பகுதிகளில் சட்டவிரோதமாக கேரளாவில் இருந்து கழிவுகளை கொண்டுவந்து கொட்டப்படுகிறது என புகார் வந்தவுடன் விரைந்து நடவடிக்கை எடுத்ததன் பேரில், கழிவுகளை கொட்டிய சுத்தமல்லி கிராமத்தைச் சேர்ந்த மனோகரன், மாயாண்டி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### கேரள அரசுக்கு கடிதம்!

தமிழ்நாட்டில் கேரள மருத்துவக் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேரள மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இதுகுறித்து உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறும் ஒன்றிய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

முதலமைச்சர் உத்தரவின் பேரில் தமிழ்நாடு – கேரளா எல்லைப்பகுதிகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்பதுபோல் எதிலாவது அரசியல் செய்து பேர் எடுக்கத் துடித்துக் கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கம் சார்பில்

# "காலனியமும் தமிழ் மறுமலர்ச்சியும்" கருத்தரங்கம்!

## கருத்தியல் ஆசிரியர் சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் தேன்மொழி பொன் முத்துராமலிங்கம் வாழ்த்துரை!

மதுரை, டிச.20-

திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கமும், மதுரை ஆய்வு வட்டமும் இணைந்து நடத்திய காலனியமும் தமிழ் மறுமலர்ச்சியும் எனும் கருத்தரங்கம் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி முதல்வர் முனைவர்.ம. புவனேஸ்வரன் தலைமை தாங்கினார். மதுரை காமராசர் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் பிரவீன் குமார் வரவேற்புரை வழங்கினார். திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் தேன்மொழி முத்துராம லிங்கம் தமது வாழ்த்துரையில், "இந்திய வரலாற்றில் நிகழ்ந்த கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான பொருள்முதல்வாதப் போராட்டத்தின் தொடர்ச்சிதான் திராவிடம்" என்பதனைப் பதிவு செய்தார்.

திராவிடம் - தமிழ் என்கிற தலைப்பில் சிறப்புரை ஆற்றிய பேராசிரியர் வீ. அரசு, "திராவிடமும் தமிழும் வெவ்வேறல்ல. திராவிடத்தையும் தமிழையும் வேறுபடுத்தி பேசுபவர்களின் நோக்கம் அற்பத்தனமாக இருக்கிறது. மார்க்சியர்களாலும் தமிழ்த் தேசியவாதிகளாலும் கூட திராவிடத்தின் இயக்கவியலைப் புரிந்து கொள்ள முடியவில்லை. தமிழும் திராவிடமும் ஒரு மொழியைக் குறித்த இருவேறு சொற்கள். 19-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற பகுத்தறிவுச் செயல்பாடுகள் முந்தைய ஆயிரம் ஆண்டுகள் கற்பிதங்களை தலைகீழாக்கியது. 20 நூற்றாண்டில் சனாதானத்திற்கு எதிரான போராட்டத்தை பெரியாரும் அம்பேத்கரும் முன் நின்று நிகழ்த்தினார்கள். ஒரு சொல்லை வைத்து விளையாடக்கூடிய விளையாட்டுகள் நமக்குத் தேவையில்லை" என்று உரையாற்றினார்.




திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கமும், மதுரை ஆய்வு வட்டமும் இணைந்து நடத்திய காலனியமும் தமிழ் மறுமலர்ச்சியும் எனும் கருத்தரங்கம் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி முதல்வர் முனைவர். ம.புவனேஸ்வரன் தலைமை தாங்கினார். மதுரை காமராசர் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் பிரவீன் குமார் வரவேற்புரை வழங்கினார். திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் தேன்மொழி முத்துராமலிங்கம் தமது வாழ்த்துரை வழங்கினார்.

முனைவர் க.சி. பழனிக் குமார், "அத்திப்பாக்கம் வெங்கடாசலனாரும் அயோத்திதாசாரும் ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களின் பிரதிநிதிகளாக, காலணியத்திடம் உரிமை போராட்டத்தை மேற்கொண்டனர் அவர்கள் உண்மையான பொருளில் தமிழின் மறுமலர்ச்சிக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்" என்றார்.

தோழர் குமரன் விதேசிகளுக்கு எதிரான சுதேசிகள் காலனியவாதிகளிடம் நிகழ்த்திய உரையாடல் குறித்து வெளிவந்துள்ள ந. கோவிந்தராசனின் காலனிய ஆய்வுகள் குறித்து உரையாற்றினார்.

இக் கருத்தரங்கில் 200-க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.